The Asia Foundation

theertha

# விண்ணப்பங்கள் கோரல்
# தொழில்முறை சாரா இளம் கலைஞர்கள

## மேலோட்டமான விளக்கம்

"எங்கள் கதைகள்" திட்டத்தின் ஒரு பகுதியாக, ஆசியா மன்றமானது அம்பாறை, களுத்துறை, குருநாகல், மன்னார், திருகோணமலை மற்றும் வவுனியாவை தளமாகக் கொண்ட தொழில்முறைசாரா இளம் கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோருகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில் *Promoting Shared Values, Shared Spaces and Dispute Resolution in Sri Lanka* கீழ் செயல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மூலம், ஆசிய மன்றமானது மேற்கூறிய மாவட்டங்களில் உள்ள வயது முதியவர்களிடமிருந்து தொடர்ச்சியான வாழ்க்கைக் கதைகளை சேகரித்துள்ளது. இந்த முக்கிய சாட்சியங்களையும் போதனைகளையும் பரந்த சமூகத்திற்கும் குறிப்பாக இளைஞர்களுக்கும் தெரிவிக்க, ஆசிய மன்றமானது பிராந்திய தொழில்முறை கலைஞர்கள் மற்றும் தொழில்முறை சாரா இளம் கலைஞர்களை ஈடுபடுத்துவதன் மூலம் கொடுக்கப்பட்ட கதைகளை கலைகளாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொழில்முறைசாரா இளம் கலைஞரின் பாத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் வேட்பாளர்கள் "தீர்த்த சர்வதேச கலைஞர்களின் கூட்டு" உறுப்பினர்களை உள்ளடக்கிய ஒரு குழுவால் பட்டியலிடப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்முறை சாரா இளம் கலைஞர்கள், கலையின் மூலம் கதை சொல்வதற்கு பயிற்சி அளிக்கும் செயலமர்வுகளில் கலந்து கொள்ள அழைக்கப்படுவர். இந்த தலைப்பில் ஏற்கனவே பயிற்சி பெற்றுள்ள பிராந்திய தொழில்முறை கலைஞர்களினால் இந்த செயலமர்வுகள் முன்னெடுக்கப்படும். இந்த செயலமர்வுகளின் ஊடாக, ஆசிய மன்றத்தினால் வழங்கப்பட்ட வயது முதியவர்களின் வாழ்க்கைக் கதையின் அடிப்படையில் ஒரு மூலப் பிரதியை தயாரிப்பதற்கு தொழில்முறைசாரா இளம் கலைஞர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

## யார் விண்ணப்பிக்கலாம்?

- காட்சிக் கலை (புகைப்படம் மற்றும் குறுந்திரைப்படம் உள்ளடங்கலாக), ஆற்றுகைக் கலை (நாடகம், நடனம், இசை மற்றும் கவிதை உள்ளடங்கலாக) மற்றும் புதிய ஊடகத்தில் (வரைகலை மற்றும் அனிமேஷன் கதை கூறல் உள்ளடங்கலாக) உள்ள ஆண் மற்றும் பெண் தொழிற்முறைசாரா கலைஞர்கள்
- 18 மற்றும் 35 வயதுக்குட்பட்டோர்
- பின்வரும் மாவட்டங்களில் ஒன்றில் விண்ணப்பதாரிகள் வசிக்க வேண்டும்: அம்பாறை, களுத்துறை, குருநாகல், மன்னார், திருகோணமலை, அல்லது வவுனியா

## விதிகள் மற்றும் நிபந்தனைகள்

தங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது, ஆர்வமுள்ள வேட்பாளர்கள் பின்வரும் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்:

1. தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்கள் அனைத்து பட்டறைகளிலும் பங்கேற்பது மற்றும் இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தப்படும் கண்காட்சிகள் தொடர்பாக அர்ப்பணிப்பு அறிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்கள் ஆசிய மன்றம் வழங்கிய முதியவர்களின் வாழ்க்கைக் கதைகளின் அடிப்படையில் அசல் கலைப்படைப்புக்களை உருவாக்க வேண்டும்.

3. பதிப்புரிமை பெற்ற பொருளின் மீறலுக்கு ஆசிய மன்றம் எந்தப் பொறுப்பையும் ஏற்காது.

4. ஆசிய மன்றம் ஏற்பாடு செய்த பிராந்திய கண்காட்சிகளுக்கு முன்னர் திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட கலைப்படைப்புகள் வேறு எங்கும் காட்சிக்கு வைக்கக்கூடாது.

5. ஒரு கலைஞர் ஐந்து படைப்புக்கள் வரை சமர்ப்பிக்கலாம். இருப்பினும், இது கண்காட்சி நடைபெறும் இடத்தில் இடம் கிடைப்பதைப் பொறுத்தது.

6. இந்த திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட பட்டறைகள் மற்றும் கண்காட்சிகளில் பங்கேற்பதன் மூலம், தேர்ந்தெடுக்கப்பட்ட கலைப்படைப்புகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கலைப்படைப்புகளின் ஒளிப்படங்களை காட்சிக்கு மட்டுமே பயன்படுத்த ஆசிய மன்றம் அனுமதிக்கப்படுவதாக கலைஞர்கள் ஒப்புக்கொள்கிறார்கள், மேலும் சமூகவலைத்தளங்கள் உட்பட. ஆனால் அவை மட்டுமின்றி மன்றத்தின் வெளியீட்டுத் தேவைகளுக்காகவும், விளம்பர நோக்கங்களுக்காகவும் ஊடக தளங்கள் மற்றும் அறிக்கைகளுக்காகவும் பயன்படுத்த முடியும், இதற்கு கலைஞர்களுக்குரிய அங்கீகாரம் மற்றும் வெகுமதி வழங்கப்படும்.

7. ஆசிய மன்றத்தின் குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கையின்படி, 18 வயதிற்குட்பட்ட குழந்தைகளைக் கொண்டிருக்கும் எந்த புகைப்படங்கள் அல்லது காணொளிகளுக்கும், கலைஞர் குழந்தையின் பெற்றோர் அல்லது பாதுகாவலரிடமிருந்து எழுத்துப்பூர்வ ஒப்புதலைப்பெற வேண்டும்.

-

இந்தச் செயற்றிட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு ஆர்வமுள்ள தேர்ந்த கலைஞர்கள், இத்துடன் இணைக்க ப்பட்டுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து மின்னஞ்சல் ஊடாக ourstories2020lka@gmail.com அல்லது தபால மூலமாக ,

“எங்கள் கதைகள்”
தீர்த்த சர்வதேச கலைஞர்கள் கூட்டு,
தீர்த்த ரெட் டொட் கெலறி,
39/4 ஏ டீ.எஸ். சேனாநாயக்க வீதி,
கொழும்பு 8 என்ற முகவரிக்கு
அக்டோபர் 30.2020இற்கு முன்பதாக
அனுப்பி வைக்கவும

மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:ourstories2020lka@gmail.com

## தனிப்பட்ட விபரங்கள்

பெயர்: ______________________________

______________________________

கடைசிப்பெயர்: ______________________________

______________________________

பிறந்த திகதி: ______________________________

பால்நிலை: ______________________________

பேசும் மொழி(கள்):

☐ சிங்களம் ☐ தமிழ ☐ ஆங்கிலம

வேறு மொழிகள்: ______________________________

தொழில்: ______________________________

## தொடர்பு விபரங்கள்

மின்னஞ்சல்: ______________________________

______________________________

தொலைபேசி இலக்கங்கள்: ______________________________

______________________________

தபால் முகவரி: ______________________________

______________________________

______________________________

மாவட்டம்: ______________________________

______________________________

தற்போது வதியும் இடம் (தபால் முகவரியில் இருந்து வேறுபட்டிருப்பின்)

______________________________

______________________________

______________________________



## தொழில்சார் அனுபவம்

நீங்கள் பங்குபற்றுவதற்கு ஆர்வமாக உள்ள வகையை

- ☐ காட்சி (புகைப்படம் மற்றும் குறுந்திரைப்படங்கள் உள்ளடங்கலாக)
- ☐ ஆற்றுகை (நாடகம், நடனம், இசை மற்றும் கவிதை)
- ☐ புதிய ஊடகம் (வரைகலை மற்றும் அனிமே'ன் கதை கூறல்)

உங்கள் கலை நடைமுறை மற்றும் பின்னணியை சுருக்கமாக விவரிக்கவும்.

இந்த பட்டறை மற்றும் கண்காட்சிக்கு விண்ணப்பிக்க நீங்கள் ஏன் ஆர்வமாக உள்ளீர்கள் என்பதை எங்களுக்குத் தெரிவிக்கவும்.

மேலும் ஏதேனும் தகவல்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பினால், அதற்க்காக கீழே உள்ள இடத்தைப் பயன்படுத்தவும்.

உங்களுடைய படைப்பின் ஐந்து மாதிரிகள் வரை உள்ளடக்கவும் (இருப்பின்).

விதிகளும், நிபந்தனைகளும்,

☐ எனது விண்ணப்பம் மற்றும் இந்த திட்டத்தில் பங்கேற்பது தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நான் படித்து ஒப்புக் கொண்டேன் என்பதை உறுதி செய்கிறேன்.